# ‘தேசியக் கல்விக் கொள்கையும் இந்தியாவின் எதிர்காலமும்’

## திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் நடத்திய கருத்தரங்கில் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அறிவியல் ஆலோசகர் டாக்டர் பொன்ராஜ் உரை!

**திருச்சி, ஜீன் 27-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இந்திய ஜனநாயக மீட்பு இயக்கம் மற்றும் திருச்சி(தெ) மாவட்டக் கழகம் இணைந்து நடத்திய ‘இளைஞர்கள் கருத்தரங்கம்’நிகழ்வில் டாக்டர்.பொன்ராஜ் வெள்ளைச்சாமி (மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி. ஜே.அப்துல் கலாம் அவர்களின் அறிவியல் ஆலோசகர் &IDRM Convenor) உரை.**

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா - சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் பிறந்தநாள் விழா - இளைஞர்கள் கருத்தரங்கம் ஆகியவற்றை திருச்சியில் சிறப்பாக ஒருங்கிணைத்துள்ள அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். எனக்கு கொடுக்கப்பட்டுள்ள தலைப்பு ‘தேசியக் கல்விக் கொள்கையும் இந்தியாவின் எதிர்காலமும்’ என்பதுதான்.

**மதங்கொண்ட யானை சிங்கத்திடம் தோற்று ஓடும்!**

எனக்கொரு திரைப்பட வசனம் நினைவுக்கு வருகிறது, “மதம் கொண்ட யானை என்ன செய்யும் தெரியுமா? சினம் கொண்ட சிங்கத்திடம் தோற்று ஓடிப் போகும்”. அந்த வகையில் தான், அமைச்சர் அன்பில் மகேஸ் அவர்கள் ‘தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் மதயானை’ என்ற புத்தகத்தை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய பதிவை சுட்டிக்காட்டி எழுதியிருக்கிறார். தேசியக் கல்விக் கொள்கை 2020 என்கிற பெயரில் அந்த மதயானை இந்தியாவை எந்த அளவுக்கு நாசப்படுத்திக் கொண்டு இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனென்றால் இது நம்முடைய குழந்தைகளின், இளைஞர்களின் எதிர்காலத்தை பாழ்படுத்த உருவாக்கப்பட்ட கொள்கை. நீதிக்கட்சி தொடங்கிய காலத்தில் இருந்து திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் வரை, தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர்

**இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் வழியில் தான் நம்முடைய அமைச்சர் அவர்களும் பள்ளிக்கல்வித்துறையை நிர்வகித்து வருகிறார்.**

**அரசுப் பள்ளி வறுமையின் அடையாளமல்ல-பெருமையின் அடையாளம்!**

**கடும் பணிகளுக்கு இடையிலும் அவர் பி.எச்டி படித்துவருவதை புத்தகத்தில் இருக்கும் குறிப்பில் பார்த்தேன். மாணவர்களின் நலனில் துடிப்புமிக்க இளைஞராக அக்கறையோடு பணியாற்றி, ஒட்டுமொத்த இந்தியாவிலேயே புதிய கல்விக்கொள்கைக்கு எதிராக ஒலிக்கக் கூடிய உரிமைக்குரலாக, தமிழ்நாட்டு முதலமைச்சரின் அன்பு இளவலாக உரிமைக்குரலாக திகழ்ந்து கொண்டு இருக்கிறார். இப்படியொரு அமைச்சர் கிடைக்க வேண்டும் என்றால் நிச்சயம் தமிழ்நாடு கொடுத்து வைத்திருக்க வேண்டும். அமைச்சர் எழுதியுள்ள இந்த புத்தகத்தை அனைவரும் நிச்சயம் படிக்க வேண்டும்.** தனது பொறுப்பை அவர் எந்த அளவுக்கு உணர்ந்து, சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை “அரசுப்பள்ளி என்பது வறுமையின் அடை யாளம் அல்ல; பெருமையின் அடையாளம்” என்று அவர் குறிப்பிடுவதை புரிந்து கொண்டாலே தெரிந்துவிடும். அப்துல்கலாம் உள்ளிட்ட பல்வேறு ஆளுமைகள் அரசுப்பள்ளிகளில் தான் படித்துள்ளார்கள்.

**சத்தமில்லாமல் அமல்படுத்திய தேசியக் கல்விக் கொள்கை!**

இன்றைக்கு ஈரான் - இஸ்ரேல் இடையேயும், ரஷ்யா - உக்ரைன் இடையேயும் போர் நடக்கிறது. இது மிகப்பெரிய உயிர் பலிகளை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறது. ராணுவ வீரர்களால் நடக்காமல் முழுக்க முழுக்க ஏவுகணைகளால் இந்தப் போர்கள் நடக்கின்றன. இன்னொரு பக்கம் யார் யார் மீது அணுகுண்டை போடுவார்கள் என்று பதற்றம் நிலவிக் கொண்டு இருக்கிறது. இந்தியாவில் கொரோனா நோய் தொற்றின் மூன்று அலைகளை அடுத்தடுத்து நாமெல்லாம் எதிர்கொண்டிருந்தபோது, சத்தமில்லாமல் தேசியக் கல்விகொள்கை 2020ஐ அமல்படுத்திவிட்டார்கள். ஒரு பக்கம் உலகம் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கம் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் அணு ஆயுதப்போரைவிட, ஏ.ஐ டெக்னாலஜி போன்றவை இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பில் ஏற்படுத்தக் கூடிய தாக்கம் மிகப்பெரியதாக இருக்கும் என மேற்குலக ஆராய்ச்சி யாளர்கள் கணித்து இருக்கிறார்கள்.

**உலகம் இன்று தானியங்கி தொழில்நுட்பத்தில் உள்ளது!**

அன்றைய காலகட்டத்தில் திருச்சி பெல் போல ஒரு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தால், ஓய்வுகாலம் வரை அதே நிறுவனத்தில் வேலை பார்த்து, பின்னர் ஓய்வூதியம் வாங்கிக் கொண்டு வீட்டில் இருப்பார்கள். ஆனால் அந்த நிலை எல்லாம் இப்போது மாறிவிட்டது. இன்றைக்கு ஒருவரே இரண்டோ, மூன்றோ அல்லது நான்கு நிறுவனங்களில் வேலை செய்ய வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. அதுவும் இன்றைக்கு இருக்கக்கூடிய வேலை நாளைக்கு இருக்குமா என்பதுகூட தெரியாத நிலை உள்ளது. இப்போது இருக்கும் வேலையை நம்பி திருமணம் செய்து கொள்ள முடியுமா? மாதத் தவணையில் இருசக்கர வாகனம் வாங்க முடியுமா? ஒரு வீடு கட்டிவிட முடியுமா? என்றெல்லாம் எதிர்பார்க்க முடியாது. அந்த அளவுக்கு தொழில்நுட்பம் வளர்ந்து கொண்டு இருக்கிறது. செயற்கை நுண்ணறிவுத் துறையால் உலகளவில் எல்லா துறையுமே தானியங்கு தொழில்நுட்பத்தை நோக்கி மாறிக் கொண்டிருக்கிறது. தொழிலாளர்களே இல்லாமல் ரோபோக்கள் மூலம் ஒரு கார் உற்பத்தி செய்யும் அளவுக்கு மாற்றம் வந்துள்ளது.

**இந்தியாவிலேயே சிந்திக்கக்கூடிய ஒரே அரசு ‘திராவிட மாடல்’ அரசு!**

எனவே, ஒரே வேலையை திரும்பத் திரும்ப செய்பவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத காலம் உருவாகியுள்ளது. கற்பனைத் திறன், புதுவித எண்ணங்கள், யோசனைகள், அறிவார்ந்த சிந்தனையை யார் விதைக்கிறார்களோ அவர்கள் தான் இனி வாழ முடியும் என்கிற நிலைமை தான் உலகளவில் நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு நாம் தயாராக இருக்கிறோமா? அந்த அளவுக்கு நம்மை நாம் உயர்த்தி இருக்கிறோமா? என்று சிந்திக்கூடிய ஒரு அரசு இருக்கிறது என்று சொன்னால் அது இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாடு அரசுதான்! திராவிட மாடல் அரசுதான்!

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் நம்முடைய இளைஞர்கள் 39 லட்சம் பேர் பல்வேறு தொழில் நிறுவனங்களில் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை பெற்று வருகிறார்கள். இது அந்த இளைஞர்கள் படிப்பை முடிக்கும்போதே திறமையானவர்களாக உருவாக உதவும். இதேபோல புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் என பல்வேறு திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிறார். நம்முடைய மாணவர்களுக்கு எப்படி தலைசிறந்த எதிர்காலத்தை உருவாக்குவது, உலகத்தோடு போட்டிப்போடும் வகையில் அவர்களை எப்படி தயார் செய்வது என்பதை பார்த்துப் பார்த்து இரவும் பகலுமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்தே நம்முடைய குழந்தைகளின் லட்சியத்தை நிறைவேற்றுவதற்கான நமது முதலமைச்சரின் கனவு எத்தகையது என்று.

**‘திராவிட மாடல் ஆட்சி’ ஒரு வரப்பிரசாதம்!**

“மன எழுச்சி கொண்ட இளைஞர்கள் கூட்டம் தான், இந்த பூமியில் உள்ள எந்த விதமான சக்தியை விடவும் மிகப்பெரிய சக்தி” என்று அப்துல்கலாம் சொல்வார். அப்படிப்பட்ட இளைஞர் சக்தியை சரியான திசையில் வழிநடத்த வேண்டும் அவர்களுக்கு ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை சரியான திசையில் கொண்டுவர வேண்டும் என்று நீதிக்கட்சி காலம் முறை இன்றுவரை அடித்தளமிட்டு வருவது திராவிட மாடல் ஆட்சி. இன்றைக்கு தமிழன் சாதனை சரித்திரத்தை உலகமெங்கும் படைக்கிறான் என்று சொன்னால் அதற்கு காரணம், தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் தான்.



தமிழ்நாட்டிற்கு கிடைத்திருக்கும் இத்தைய சூழல் பிற மாநிலங்களுக்கு கிடைக்கவில்லை. நான் கோவா, டையூ, டாமன் தவிர இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் அப்துல் கலாம் அவர்களுடன் நான் சுற்றுப்பயணம் சென்றிருக்கிறேன். ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கக்கூடிய நிலை என்ன என்பதை அறிந்திருக்கிறேன். அந்த வகையில் சொல்ல வேண்டுமென்றால், திராவிடத்தால் தமிழ்நாடு அடைந்திருக்கும் வளர்ச்சியை வட மாநிலங்கள் எட்டுவதற்கு இன்னும் 20 அல்லது 30 ஆண்டுகள் பிடிக்கும். அதுவும் லேசான விஷயம் அல்ல. குடிநீர், மின்சாரம், விவசாயி களுக்கான திட்டங்கள் என எதுவாக இருந்தாலும் சரி, சமூகநீதி பொருளாதார நீதி அரசியல் நீதி ஆகிய மூன்றுநீதிகளும் கிடைப்பது தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் சிறப்பானதாக இல்லை. எனவே தான் திராவிட மாடல் ஆட்சி என்பது நமக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்று சொல்கிறேன்.

**பா.ஜ.க.வின் ஒரே பிரச்சினை நம் முதல்வர் மட்டும்தான்!**

இன்றைய இளைஞர்கள், மாணவ - மாணவியர் எதிர்நோக்கி இருக்கக்கூடிய சவால்கள் என்னென்ன என்றால், இப்போதிருக்கும் கல்வி முறையை தேசிய கல்விக் கொள்கை 2020 என்பதை கொண்டு வந்து மாற்ற வேண்டும் என ஒரு கூட்டம் துடித்துக் கொண்டு இருக்கிறதே அதுதான். அந்தக் கூட்டம் தேசிய கல்விக்கொள்கையை ஏற்கவில்லை என்றால் சம்க்ர சிக்ஷா அபியான் நிதி ரூ.2,152 கோடியை தர மாட்டோம் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நீ 10 ஆயிரம் கோடி கொடுத்தாலும் சரி தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்த மாட்டோம் என்று சொல்லி, ஒன்றிய அரசு கொடுக்காத நிதியை தமிழ்நாடு அரசே ஏற்கும் என்று அறிவித்து செயல்படுத்தி இருக்கிறார் நம்முடைய முதலமைச்சர். ஒட்டுமொத்த இந்தியாவி லேயே அந்த கூட்டத்திற்கு இருக்கும் ஒரே பிரச்சினை என்பது தமிழ்நாட்டில் இருந்து ஒலிக்கும் உரிமைக்குரல் தான் பிரச்சினை. எனவேதான் இதனை முடக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் எண்ணம்.

இப்படிப்பட்ட நிலையில் திராவிடம் உருவாக்கிக் கொடுத்த கல்விக் கட்டமைப்பால் நாம் சாதித்தது என்ன என்பதை புரிந்து கொண்டால், அந்தக் கூட்டம் திணிக்க நினைப்பது சமஸ்கிருத கல்வி, சமூக அநீதி கல்வி, குலக்கல்வி, நம் வீட்டுப்பிள்ளைகளை கல்வியைவிட்டு விலகி ஓடவைக்கக்கூடிய கல்விமுறை என்பதை புரிந்து கொள்ள முடியும். எனவே தான் இந்தியாவின் எதிர்காலத்திற்கே தேசிய கல்விக்கொள்கை மிகப்பெரிய கேள்விக்குறி என்று சொல்கிறோம்.

டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் குடியரசுத் தலைவராக இருந்தபோது, அலுவலகத்தில் என்னை அழைத்தார். அவரது அறையில் இஸ்ரோ விஞ்ஞானிகள் இருந்தார்கள். அவர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் என்னையும் கலந்து கொள்ளச் சொன்னார். அந்த கூட்டத்தில் இஸ்ரோவின் புதிய திட்டம் ஒன்றை அப்துல்கலாம் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, ஆலோசனை பெற வந்திருந்தார்கள். அதுதான் சந்திராயன் ஒன் திட்டம். அப்போது இஸ்ரோ விஞ்ஞானிகள் அப்துல்கலாமிடம் சொன்னார்கள், “சார், இந்தியாவிலேயே முதல்முறையாக சொந்தமாக தயாரித்த ராக்கெட் எஸ்.எல்.வி3ஐ விண்ணில் ஏவிய நீங்கள்தான் எங்களுக்கெல்லாம் குரு. உங்களுடைய ஆலோசனையின்பேரில் இந்த சந்திரயான் 1 திட்டத்தை செயல்படுத்த இருக்கிறோம். இது பூமியின் சுற்று வட்டப்பாதையைத் தாண்டி, புவி ஈர்ப்பு விசையை தாண்டி, நிலவின் சுற்று வட்டப்பாதையில் நுழைய வேண்டும். இதை இந்தியா இதுவரை செய்யவில்லை. இதுதான் முதல்முறை” என்று சொன்னார்கள். “அங்கு போய் என்ன செய்யப்போகிறீர்கள்” என அப்துல் கலாம் கேட்டார். அதற்கு விஞ்ஞானிகள், “நிலவில் தண்ணீர் இருக்கிறதா என்பதை கண்டறியும் திட்டம் தான் இது” என்று சொன்னார்கள். உடனே அப்துல்கலாம், அந்த திட்டத்தை இன்னும் மேம்படுத்தும் வகையில் சில யோசனைகளை சொன்னார். அதற்கு விஞ்ஞானிகள் எங்களுக்கு அவ்வளவு நிதி இல்லை; இந்த திட்டமே அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்துதான் செய்கிறோம் என்றார்கள். நீங்கள் அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம், நான் பிரதமரிடம் பேசி கூடுதல் நிதி ஒதுக்கச் சொல்கிறேன் என்று அப்துல் கலாம் சொன்னார். அதன்படியே செய்தார்.

எனவே சந்திரயான் 1 திட்டமானது விரிவாக்கம் செய்யப்பட்டு, அப்துல்கலாம் சொன்ன யோசனைகள் அனைத்தும் கடைபிடிக்கப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேறியது. நிலவின் செய்த ஆய்வு முடிவுகள் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுவதற்கு 40 நாட்களுக்கு முன்பு அமெரிக்காவின் நாசாவில் இருந்து அப்துல் கலாம் அவர்களை ஒரு ஆய்வுக் கூட்டத்திற்கு அழைத்தார்கள். அவரோடு நானும், இஸ்ரோ விஞ்ஞானிகளும் சென்றோம். அப்போது நிலவில் எங்கு தண்ணீர் இருக்கிறது என்று சந்திராயன் மூலம் எப்படி கண்டறிந்து இருக்கிறோம் என்று விளக்கினார்கள்.

அப்போது நாசாவின் முதன்மை விஞ்ஞானி எழுந்து, அப்துல் கலாமை நோக்கி உங்களிடம் முக்கியமான விஷயத்தை சொல்ல வேண்டும் என்றார். என்னவென்று கேட்டபோது, “அமெரிக்கா பல்வேறு நாடுகளுடன் இணைந்து நிலவு குறித்து ஆராய்ச்சி செய்திருக்கிறது. ஆனால் அப்போதெல்லாம் சரியான எந்த முடியும் கிடைக்கவில்லை. ஆனால் இந்தியாவுடன் இணைந்து வேலை பார்த்தபோது நிலவில் தண்ணீர் இருப்பதை கண்டறிய முடிந்திருக்கிறது. நாசா, இஸ்ரோவோடு சேர்ந்ததும், அமெரிக்கா இந்தியாவோடு சேர்ந்ததும் முதல் முயற்சியிலேயே வெற்றி” என்று சொன்னார். அதற்கு அப்துல்கலாம் “அது எப்படி நடத்தது” என்று கேட்டார். அதற்கு நாசாவின் முதன்மை விஞ்ஞானி, “இந்தியாவின் இஸ்ரோ விஞ்ஞானிகள் கணிதத்தில், இயற்பியலில், வேதியலில், உயிரியியலில், பொறியியலில் என அனைத்து பிரிவிலும் மிகவும் திறமையானவர்களாக இருக்கிறார்கள். இத்தனை அறிவையும் ஒருங்கிணைந்து பெற்றவர்களாக இஸ்ரோ விஞ்ஞானிகள் இருப்பதால் தான் நிலவில் தண்ணீர் இருக்கிறதா என்பதை கண்டறிய முடிந்து இருக்கிறது” என்று வியப்போடு சொன்னார். இதையடுத்து நாசாவில் கூட்டத்தை முடித்துக் கொண்டு உணவகம் ஒன்றிற்கு சென்றிருந்தோம்.

**நமது கல்வி முறையை கேள்வி கேட்க ஒரு தகுதி வேண்டும்!**

அங்கு அப்துல்கலாம் என்னிடம் உயர்கல்வி படிப்பது சார்ந்து சில கேள்விகளை கேட்டார். பள்ளிகளில் உயரிய மதிப்பெண்கள் எடுத்து, பெரிய பெரிய கல்வி நிறுவனங்கள் தொடங்கி அடுத்தடுத்த நிலையில் இருக்கும் கல்வி நிறுவனங்களில் படிக்கச் செல்லும் மாணவர்கள் குறித்தும், அவர்கள் எங்கெங்கு செல்வார்கள் என்பதையும் என்னிடம் கேட்டார். அதற்கு உயரிய மதிப்பெண்கள் எடுக்கும் மாணவர்கள் எல்லாம் வெளிநாடுகளுக்கும் மிகப்பெரிய தனியார் நிறுவனங்களுக்கும் வேலைக்குச் செல்வார்கள் என்று சொன்னேன். அதற்க இறுதியாக அப்துல்கலாம் சொன்னார், “இஸ்ரோ, டி.ஆர்.டி.ஓ, அட்டாமிக் எனர்ஜி, CSIR ஆகிய 4 நிறுவனங்கள் அறிவியல் ஆராய்ச்சி சார்ந்து இந்தியாவில் இருக்கின்றன. அவற்றில் மொத்தம் 60 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். இந்த 4 நிறுவனங்களிலும் பணியாற்ற கிடைக்ககூடிய மாணவர்களின் மதிப்பெண்கள் 75. முதல் 85 சதவீதம் வரை தான் இருக்கும். அவர்களை வைத்துதான் நிலவில் தண்ணீர் இருப்பதை கண்டறிந்து இருக்கிறோம். அக்னி, ப்ரமோஸ், பிரித்வி, ஆகாஷ் போன்ற ஏவுகணைகளை உருவாக்கி இருக்கிறோம். அவர்களை வைத்துதான் இந்தியா அணுசக்தியில் வல்லமை பெற்ற நாடாக மாறியிருக்கிறது. இவ்வளவு சாதனைகளையும் படைத்தோம்” என்று சொன்னார்.

அப்படிப்பார்த்தால் அந்த சாதனைகளை எல்லாம் படைத்தவர்களில் அதிக பங்களிப்பு செய்த தமிழ்நாட்டு மாணவர்கள், நம்முடைய கல்விமுறையில் படித்தவர்கள் தான். புதிய கல்விக்கொள்கையில் படித்தவர்கள் அல்ல. எனவே தான் சொல்கிறோம், நம்முடைய கல்விமுறையை கேள்வி கேட்பதற்கு ஒரு தகுதி வேண்டும். பாடத்திட்டத்தை, பள்ளிக்கல்வியின் நிர்வாகத்தை, ஆசிரியப் பெருமக்களின் பணியை, கற்பித்தல் முறையை கேள்வி கேட்க ஒரு தகுதி வேண்டும். எதில் எடுத்துக் கொண்டாலும் தமிழன் முதலிடத்தில் இருக்கிறான் என்பதை தாங்கிக் கொள்ள முடியாமல், அதையெல்லாம் ஒழிக்க வேண்டும், மும்மொழிக் கொள்கையை திணிக்க வேண்டும் சமஸ்கிருதத்தை புகுத்த வேண்டும் குலத்தொழிலை கொண்டுவர வேண்டும் என்று நினைக்கிறார்கள். உலகம் ஏ.ஐ. தொழில்நுட்பத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஆனால் குலத்தொழில்களை ஆறாம் வகுப்பில் இருந்தே படிக்க வேண்டும் என்று புதிய கல்விக்கொள்கையில் சொல்கிறார்கள். நமது கல்வியோ, பள்ளிக்கல்விக்கு பின்னர் நீ தொழிற்கல்வியோ, டிப்ளோமோ, பொறியியலோ, கலை அறிவியலோ, மருத்துவமோ என்ன விரும்பினாலும் படி என்று சொல்கிறது.

**அறிவை கையில் எடுத்த நாடுகளே வளர்ந்துள்ளன!**

எல்லோருமே ஒரே உணவைத்தான் சாப்பிட வேண்டும் என்றோ, எல்லோருமே ஒரே மாதிரியான உடையைத்தான் அணிய வேண்டும் என்று சொல்ல முடியுமா? ஆனால் அப்படிப்பட்ட ஒரு சூழலை உருவாக்கும் முயற்சியில் நம்முடைய சந்ததியின் எதிர்காலத்தை சிதைக்கும் முயற்சியை செய்து வருகிறார்கள். ஒரு தவறான கருத்தாக்கத்தை உருவாக்கி, அதை உண்மையென நம்முடைய இளைஞர்களை நம்ப வைத்து, அதை வாக்குகளாக மாற்றும் ஒரு முயற்சி இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் நடந்து வருகிறது. இதையெல்லாம் புரிந்து கொண்டு இளைஞர்கள், மாணவ, மாணவியர் எந்தவித திசை திருப்பல்களுக்கும் ஆளாகிவிடக் கூடாது.

**“சாதி” நம்மை சாதிக்க விடாது!**

தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் தமிழர்களின் மனங்களில் விதைத்த லட்சிய விதையை, நாம் நம்முடைய எதிர்கால தலைமுறைக்கும் விதைக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. வரக்கூடிய காலங் கள் மிகவும் சோதனையாக காலங்கள். எனவே அதையெல்லாம் எதிர்கொள்ள அறி வாயுதத்தை கையில் எடுக்க வேண்டும். அப்படியென்றால் தான் நாம் நீடித்து நிலைக்க முடியும். அறிவை கையிலெடுத்த நாடுகள் தான் வளர்ந்துள்ளன. சாதி ஒரு நாளும் நம்மை சாதனையாளர் ஆக்காது. மதம் நம்மை மதம் பிடிக்கச் செய்ய அல்ல. இனம் நம்மை தனித்துவப்படுத்த தானே ஒழிய தனிமைப்படுத்த அல்ல. அறிவு ஒன்று தான் நம்மை மகான் ஆக்கும்.

சிலர், பள்ளிக்கு பட்டையை போட்டுக் கொண்டு வா, கொட்டையை போட்டுக் கொண்டு வா என முழக்கம் இடுகிறார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்சர் மட்டும் தான் அறிவாயுதத்தை ஏந்துங்கள் என்று முழக்கமிடுகிறார். எனவே அவர் இருக்கும் வரை பயமில்லை. வேடிக்கை மாந்தர்களுக்கு நாம் மயங்கி விடாமல், வேஷம் போடும் மனிதர்களிடம் ஏமாந்துவிடாமல் லட்சியத்தோடு இருக்கக்கூடிய எதிர்கால தலைமுறைக்கு லட்சியத்தை கொண்டு சேர்க்கக்கூடிய கடமையை நாம் செய்ய விட்டால் மிகப்பெரிய அழிவை எதிர்கொள்ள வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்படும் என்பதை புரிந்து கொள்வோம்.

இவ்வாறு டாக்டர் பொன்ராஜ் பேசினார்.